தன்னுட்சிக்கான அமைப்புயோசனை விபரங்கள்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

வயது 58 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 3 இதழ்: 308
யாழ்ப்பாணம் புதன்கிழமை 18-12-1991

(தொழுதி)

இ. தொ. காங்கிரஸ் சார்பில் அமைச்சர் தொண்டமான் நாடாளுமன்ற தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்த யோசனையில் முக்கிய விபரங்கள் வருமாறு:

'தன்னுட்சிக்கான அமைப்பு' என வெளிடப்படுகின்ற இந்த யோசனையில் பல விபரங்கள் பற்றி குறிப்பிடப்படுகின்றது.

ஆளுநர், முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள் மற்றும் உயர்நீதிமன்றம் எப்படி செயற்படும்.

தன்னுட்சிக்கான அமைப்பின் அதிகாரங்கள்:

(4-ம் பக்கம் பார்க்க)

பிரச்னை தீர்வதை விரும்பாதவரே சமாதான முயற்சியை எதிர்க்கிறார்கள்

(தொழுதி)

இலங்கை இனப்பிரச்னை தீர்வதை விரும்பாதவர்களே சமாதான முயற்சிகளை எதிர்ப்பதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

சில எதிர்க்கருத்துக்கள் யோசனைகளை விமர்சிப்பதுடன்

(4-ம் பக்கம் பார்க்க)

"தொண்டா எம்முடன் தொடர்புகொண்ட பின்பும் தமிழர் மீதான நெருக்கடிகளை அரசு இன்னும் தளர்த்தவில்லை"

கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

[யாழ்ப்பாணம்]

அமைச்சர் தொண்டமான் எம்முடன் தொடர்புகொண்ட பின்னரும் அரசாங்கம் தமிழ் மக்கள் மீதான இராணுவ பொருளாதார நெருக்கடிகளை தளர்த்தவில்லை என்று விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு ஒன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இம்மாநாட்டில் மேலும் தெரிவித்தவாறு:

அமைச்சர் எந்த முறையில் தொண்டமான் எமக்கு சமர்ப்பித்துள்ள இ. தொ. கா. யின் திட்டத்தை அரசு கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

இராணுவ அழுத்தங்களையும், பொருளாதாரத் தடைகளையும் மேலும் மேலும் தமிழ் மக்கள் மீது திணித்து மக்களை மக்டினினால் வாட்டி வதைத்துக்கொண்டே இருக்கின்றார்கள். இதுபோன்ற நடவடிக்கைகளினால் விடுதலைப் புலிகளை பலவீனர்களாகி விடலாமென்றுக் அரசு திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாண

(4-ம் பக்கம் பார்க்க)

3 ஜெனரேட்டரும் பழுது மின்சாரம் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலைக்கு, கடையிலிருந்த மின்சாரம் வழங்கியிருந்த மூன்றாவது ஜெனரேட்டரும், நேற்று நண்

(4-ம் பக்கம் பார்க்க)

புலிகள் - இராணுவம் திருமலையில் மோதல்

(திருமலை)

திருமலை மாவட்டத்தி

லுள்ள நொச்சிக்குளம் கோமரங்கடவல பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே பலத்த மோதல் இடம் பெற்றது.

இம்மோதலின் போது ஏற்பட்ட சேதங்கள் பற்றி தெரிவிக்கப்படவில்லை.

முருகன் ஆலயத்தை இடித்து கலாசார மண்டபம் கட்ட திட்டம்

[மன்னார்]

இலங்கை இராணுவத்தினர் முடப்பிட்டு வண்ணத்துக்குத் தடை செய்யப்பட்ட மன்னார் பெரியகடை முருகன் ஆலயத்தை இடித்து அவ்விடத்தில் கலாசார மண்டபம் ஒன்றை அமைக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

1987 முதல் மன்னார் பெரிய கடையில் இந்து மக்களின் வணக்கத்துக்குரிய ஒரு ஆலயமாக இருந்து வந்த மேற்படி முருகன் ஆலயம் கடந்த திங்கள்கிழமை இராணுவத்தினரால் பூட்டப்பட்டுள்ளது.

1990 நவம்பரில் மன்னார் பகுதிக்கு இராணுவம் வந்த பின்னும் இவ்வாலயத்திற்கு அருகுள்ள இந்துக்கள் சென்று வழிபாடு வந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

'சாவ்' விளையாட்டுப் போட்டியில் இந்தியப் பிரதமர் கலந்துகொள்ளார்

(தொழுதி)

தொழுதியில் நடைபெறவிருக்கும் 'சாவ்' விளையாட்டுப்போட்டியின் ஆரம்பநிகழ்ச்சியில் இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் கலந்துகொள்ளமாட்டார்.

22-ம் திகதி ஞாயிறு காலை இப்போட்டிகள் ஆரம்பமாகின்றன. முதல்நாள் நடைபெறும் 'சாவ்' உச்சி மாநாட்டிலே கலந்துகொள்ளும் ஏனைய 6 நாடுகளின் தலைவர்களும் ஆரம்ப நிகழ்ச்சியில் கலந்து கொள்வர்.

(4-ம் பக்கம் பார்க்க)

தொண்டாவிற்கு புலிகள் பதில்

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் தொண்டமான் அனுப்பி வைத்த இ. தொ. கா. யின் யோசனைகள் கிடைத்தது பற்றி, புலிகள் இன்று அல்லது நாளை அமைச்சருக்குப் பதில் கடிதம் ஒன்றை அனுப்ப உள்ளனர்.

அமைச்சரின் யோசனைகளை நாம் பரிசீலிப்பது குறித்து இக்கடிதத்தில் புலிகள் குறிப்பிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

படகுகள் மீது தாக்குதல் 4 மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

மாதகலிலும் கடற்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களுக்குச் சொந்தமான 4 படகுகளை சோதனை செய்துகொண்டிருந்த கடற்படை வீரர், தாக்குதல் நடத்தி மீனவர்களுடன் படகுகளையும் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்துள்ளது.

சுமார் 10க்கு மேற்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

செஞ்சிலுவை சங்க குழு தீவுப்பகுதி விஜயம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் இராணுவத்தினரால் இடம்பெயர்ந்துள்ள மக்களின் நிலைபற்றி அறிவதற்கு செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் குழு ஒன்று இவ்வாரக்கடைசியில் அப்பகுதிக்குச் செல்லவுள்ளது.

தீவுப்பகுதியில் தற்போது இடம்பெயர்ந்துள்ள மக்களின் மொத்த விபரம் வருமாறு;

மாவிட்டபுரம் 970 பேர், ஊர்காவற்றுறை 484 பேர், புங்குடுதீவு 661பேர், மண்டைதீவு 30 பேர், வேலணைதீவு 5076 பேர், அனலைதீவு 1905 பேர், எழுவைதீவு 428 பேர். (வி)

மாலைதீவுப் படையினருக்கு இலங்கையில் ராணுவ பயிற்சி

(கொழும்பு)

மாலைதீவு படையினருக்கு இலங்கையில் இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையே காணப்படும் ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் மாலைதீவு படையினருக்கு தற்போது இலங்கையில் இராணுவப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை மாலைதீவுப் படையினருக்கு இந்தியாவிலும் இராணுவப்பயிற்சி வழங்கப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

வரி விளம்பரம்

வைத்தியம்

வண்ணார்பண்ணை பொன் னம்மா ஒழுங்கை இல 198/1ல் (ஒழுங்கை சந்திக்கு அருகாமை) இருக்கும் எனது வைத்தியநிலையத்தில் தொடர்ந்தும் சிகிச்சை நடைபெறுகிறது. என அறியத்தருகிறேன். வைத்தியர் ச. சிவசம்பு.

(சி 5728)

தவறிவிட்டது

2-10-91 மாலை 7 மணியளவில் பூநகரி ஆடிச்சாந்தியில் அமைந்திருக்கும் தேனீர் கடைக்கு முன்பாக புதிய துவிச்சக்கர வண்டி, கறுப்பு, ஒரு காட்போர்ட் பெட்டி கொண்ட உணவுப் பொருட்களும், மு. தர்மராசா, கண்டிவீதி, கிளிநொச்சி என்பவரதும், இலங்கை தெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான கடிதம் கொண்ட ஒன்றும் சேர்ந்து தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஆ. பாலசுப்பிரமணியம், 83/6, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (ஏ-1790)

வேப்பெண்ணெய்

பலவிதமான நோய்கள், பூச்சிகளை எதிர்க்கவும் இருமிநாசினியாகவும், மருத்துவரீதியாகவும் வேப்பெண்ணெய் உதவுகிறது. சுத்தமான வேப்பெண்ணெய்க்கு "மிக்ஸைற்" வேலைப்பார்த்துவரவும் அணுகோரிக்கடைகளிலும் கிடைக்கிறது. (ஏ 1785)

தவறிவிட்டது

கைதடிவடக்கு ஆச்சிரமத்திலிருந்து 13.12-91ல் அன்று கிளிநொச்சி சாவகச்சேரி நோக்கி செல்லும்போது சோரசாகரம் ஒழுங்கையூடாக திருக்குறள் மற்றும்கொப்பிகள் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் டாக்டர் வ. சின்னப்பு ஆனந்தசோதி வைத்தியசாலை கெஞ்சுமன் லேன், சாவகச்சேரி என்ற முகவரிக்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி 5727)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

பாரதி கல்வி நிலையம்

சித்தங்கேணி

A/L 93

ஆரம்பம்: 23 - 12 - 1991 திங்கள் 3 மணி

CHEMISTRY - திரு D S. சோதி B Sc.
PHYSICS - திரு. T. சண்முகலிங்கம் B. Sc.
ZOOLOGY - திரு. விக்னேஸ்வரன் B. Sc
BOTANY - திரு. சதிகுமார் B. Sc,
PURE / APPLIED - திரு. கிருஷ்ணா B. Sc.

★ A/L 92, 91 வினா விடை நடைபெறுகிறது

புதிய பிரிவு: ஆண்டு 11, 10, 9 நடைபெறுகின்றன.

எமது வழமையான ஆசிரியர் குழு

(சி 5724)

முதலாவது பிறந்ததின வாழ்த்து

★ செல்வி பா. தாரணி ★

புலவரத்தினம் விதி கோண்டாவிலைச் சேர்ந்த நாகேந்திரா - ரஜினி தம்பதியரின் புதல்வி தாரணி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று புதன்கிழமை (18-12-91) தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அக்காமார், அண்ணாமார், அத்தான்மார், மச்சிமார், பூங்கொடி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் மனமார்ந்து வாழ்க வாழ்த்துகின்றனர்.

(ஏ 1788)

உதவி பிரதமரின் புதிய இயக்கம்

(புதுடில்லி)

முன்னாள் இந்திய உதவிப்பிரதமரும் சமாஜவாதி ஜனதா (தள்) கட்சியின் தலைவருமான திரு. தேவிலால் ஹிஷான் மத்தூன் என்ற இயக்கத்தை ஆரம்பித்துள்ளார்.

இவ்வியக்கம் விரைவில் அரசியல் கட்சியாக மாற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

வங்கக்கடலில் உருவாகிய காற்றழுத்தம்

(சென்னை)

வங்கக்கடலில் உருவாகிய குறைந்த காற்றழுத்த மண்டலம் தொடருவதாக தமிழ்நாடு வானிலை மையம் அறிவித்துள்ளது.

இதன்காரணமாக தமிழ்நாட்டில் வடகோரப் பகுதிகளிலும், உள்ளூர் மாவட்டங்கள் சிலவற்றிலும் வடகிழக்கு பருவமழை பெய்யலாம் என தெரிவிக்கப்படுகிறது.

சைக்கிள் இலக்கத்தகடு திருட்டு

(வேலணை)

யாழ். குடாநாட்டில் உள்ள துவிச்சக்கர வண்டிகளின் இலக்கத்தகடுகள் திட்டமிட்டு திருடப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றன.

துவிச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்கள் தங்களது துவிச்சக்கரவண்டிகளை வேறு இடங்களிலும் விநியோகங்களில் நிறுத்திவிட்டு வெளியே வரும்போது இலக்கத்தகடுகள் திருடப்பட்டு வருவதாக துவிச்சக்கர வண்டி உரிமையாளர்கள் புகார்களை தெரிவிக்கின்றார்கள். (75)

இராசி பலன்

18- 12- 1991
புதன்கிழமை
(தமிழுக்கு மார்கழி 3)

ஏகாதசி மு. இ. 10-10வரை பரணி மு. இ. 10-43 வரை, சித்தயோகம், இராகுகாலம் காலை 12-23 முதல் 1-53வரை எமகண்டம் காலை 4-33 முதல் 6-23 வரை.

மேடம்: இஷ்டசித்தி, குடும்ப கலகலப்பு, உல்லாசம், நண்பர் உதவி.

இடபம்: எதிர்பாராத நஷ்டம், வீண்செலவு, தொழில் பீடை.

மிதுனம்: செல்வாக்கு, மகிழ்ச்சி, தொழிலில் வெற்றி.

கடகம்: இனிய உறவு, சகோதர மகிழ்ச்சி, தானதர்மம்.

சிங்கம்: ஏகாந்த சிந்தனை, குடிமை நிலை, கடன்சுமை.

கன்னி: கடன் உபாதை, எதிர்க்கு துன்பம், குடும்பப் பிரிவு.

துலாம்: வருவாய் அதிகரிப்பு, தெய்வ தரிசனம், சுபகார்யம்.

விருச்சிகம்: மனைவி சுகம், வாகன அமைவு, விருந்தினர் வருகை.

தனுசு: தொழில் தகராறு, பணமுடை, வாய்த் தர்க்கம்.

மகரம்: தனித்திருத்தல், பயண துன்பம், குடும்பத் தகராறு.

கும்பம்: எதிர்பாராத செய்தி, மன மகிழ்ச்சி, தொழில் உறவு.

மீனம்: முயற்சியில் தோல்வி, வீண் வம்பு, மனக்குறை.

ஜோக்யர்

கிளிநொச்சி செய்திகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடும் வரட்சிக்கும் பின்னர் கடந்த சில தினங்களாக கடும்மழை பெய்கிறது. சில இடங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ள அதேவேளை கிளி. நகரின் அண்மையிலுள்ள கந்தன் குளம், அம்பாள் குளம், புதுமுறிப்புக் குளம் முதலானவை வான் பாய ஆரம்பித்துள்ளன.

சிறுபோகம் இல்லை

கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய குளமான இரணைமடுக் குளத்தின் திருத்தவேலை முடிவிட்டு போதிய அளவு தண்ணீர் இல்லாமையாலும் சிறுபோக வேளாண்மையை நிறுத்த ஆலோசிக்கப்படுகிறது.

தரம் குறைந்த அரிசி மா

கிளிநொச்சிப் பகுதியில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் அரிசி, மா முதலானவை தரமில்லாதவையும், புழுக்களும், வண்டுகளும் நிறைந்து பழுதடைந்த நிலையிலும் பாவனைக்கு உகந்த தரம் இல்லாமலிருப்பதாகவும் பாவனையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

வாசகர் வட்டம்

"சாரதா" சஞ்சிகையின் கிளிநொச்சி மாவட்ட வாசகர் வட்ட அங்குரார்ப்பண வைபவம் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய கலை அரங்கில் இடம்பெற்றது. சாரதாப் பிரதம ஆசிரியர் திரு. கௌரிகாந்தன் சிறப்புரையாற்றினார்.

சாரதா வாசகர் வட்டத் தலைவராக கொற்றணி அதிபர் க. சோதிநாதனும், செயலாளராக திரு. நடராஜவடிவேலும் 17 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

தபாலகம் இடமாற்றம்

பூநகரி பிரதம தபாலகம் உருத்திரபுரம் தபாலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி, வவுனியா மாவட்ட தபால் அத்தியட்சகர் தெரிவித்தார்.

க. பொ. த. (சா) பரீட்சை

கிளிநொச்சி மாவட்டத்தில் க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை மிக அமைதியாக நடைபெற்றதாகவும், கடுத்தவான பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றியதாகவும் எதிர்பார்த்த தெரிவித்தன.

உதவி அரச அதிபர் பிரிவுக் கிளை

கிளிநொச்சி உதவி அரச அதிபர் பிரிவின் கிளை அலுவலர்ப்பண வைபவம் இம்மாதம் 20ம் திகதி காலை கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (88)

தமிழ் மக்கள் கல்வியை வளர்த்து வருகின்றனர்

(கடுவில்)

"அரச அடக்குமுறையாளர் ஆயிரம் பல கண்கள் குறைவில் இருந்தும், போர்க்கால சூழ்நிலை மாணவர்களை தழுவியிருந்தும்கூட தமிழ் மக்கள் தம் கல்வியை பேணிவளர்த்து வருகின்றனர்."

சண்டிலிப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சத்தாசிவம் இவ்வாறு கூறினார்.

அதிபர் திரு. சோமசேகரம் தலைமையில் விழா நடைபெற்றது.

கலைநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழிலாளர் கலைக்கழக சஞ்சிகை வெளியீட்டு நிதிக்கான "கலைநிகழ்ச்சி" யாழ். பல்கலைக்கழக கலைரசனி கலையரங்கில் 20ம் திகதி மாலை 6-30 மணியளவில் 200மணி வரை யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடாதிபதியின் பரதநாட்டியமும், அவையூர் சி. கலைமணி குழுவினரின் "பூதத்தம்பி" என்னும் இசைநாடகமும் இடம்பெற இருக்கிறது.

ஓய்வூதிய கொடுப்பனவு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு நயினாதீவுப்பகுதி கல்லூரியில் ஓய்வூதியகாரர்களுக்கான நவம்பர் மாத கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டுவருகின்றன.

யாழ். கோ. கோ. எஸ். விதியில் உள்ள புங்குடுதீவு நயினாதீவு மனோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் மேற்படி கொடுப்பனவு வழங்கப்படும். ஆகவே ஆகஸ்ட், செப்ரம்பர், ஒக்ரோபர் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகளை இதுவரை பெறாதவர்களும் அவற்றை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மருதனார்மடம் கோகிலா கல்லூரி பணிப்பாளர் திரு. கிங்கரராசா, சுன்னாகம் கொற்றணி அதிபர் விக்னேஸ்வரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திரு. கிங்கப்பிரகணி மக் விதாவர் தினவுப் பேருரையாற்றினார்.

கல்விப் பணிப்பாளர் திரு. இ. சத்தாசிவம் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (109)

"எயிட்ஸ்" பிரசுரம்

(மல்லாகம்)

யாழ். சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் சுகாதார கல்வி பிரிவு "எயிட்ஸ்" நோய் பற்றிய விபரங்கள் அடங்கிய பிரசுரம்ஒன்றை வெளியிட்டுள்ளது. (78)

நலன்புரிச் சங்கம்

(வேலணை)

வேலணை பிரதேச சபையின் ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நலன்புரிச் சங்கம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

இப்பிரதேச சபையின் விசேட ஆணையாளர் திரு. இ. இளங்கோவன் கௌரவராகவும், அதிகாரக் கிளிக்கேட்ட உத்தியோகத்தர் திரு. நா. குமாரசாமி தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (75)

சவர்க்கார விநியோகம்

(நாவற்குழி)

மச்சிலப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு 2 லீற்றர் மண்ணெண்ணையும், 2 சவர்க்காரமும் மச்சிலப்பள்ளி கலை நேர்க்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடு வழங்கப்படும் இவ்வேளையில் கலைநேர்க்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு ஒரு சவர்க்காரம் வழங்கப்படுகிறது. (107)

★ கர்நாடகத்திலிருந்து

20,000 தமிழர் வெளியேற்றம்; 27 பேர் பலி

தமிழகத்தில் விளைவுகள் மோசமாகலாம்

(சென்னை)

கர்நாடக மாநிலத்தில் தமிழருக்கு எதிராக இடம் பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களையடுத்து இதுவரை 20,000 தமிழர்கள் தமது இருப்பிடங்களைவிட்டுதமிழகத்திற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கர்நாடகத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 27 பேர் கொல்லப்பட்டுள்ளனர் இவர்களில் பலர் தமிழர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

தமிழருக்கு சொந்தமான கடைகள், வர்த்தகங்கள், ஆலைகள், திரையரங்குகள், வீடுகள் என நூற்றுக்கும் மேற்பட்ட கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன இதனால் தமிழருக்கு பலகோடிரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெங்களூரிலும், சுற்றுப் புறங்களிலும் தொடர்ந்தும் வன்முறை நிலைப்பு சம்பவங்களும் தாக்குதல்களும் இடம் பெற்று வருவதால் தமிழர்கள் தமிழகத்திற்கு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்ப்பாட்டம், வன்முறையாளர்களுக்கு கர்நாடக பொலிசார் பெருமளவில் பாதுகாப்பு தரவும் இதனாலேயே தமிழர் அங்கிருந்து தப்பி தமிழகம் வந்துள்ளனராம்.

கர்நாடகத்தில் தமிழர்களுக்கு எதிராக தொடர்ந்து மேற்கொள்ளப்படும் வன்செயல்கள் தமிழகத்தில் வாழும் சிங்களவர்களை ஏற்படுத்துமென தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழர்களை கர்நாடக முதல்வர் காப்பாற்றவேண்டும்

ஜெயலலிதா எச்சரிக்கை

தாக்கப்பட்ட தமிழர்கள் தேவையற்ற விதத்தில் மயமாக்கலுக்கோ, அச்சுறுத்தலுக்கோ ஆளாகக் கூடாது.

கர்நாடகத்தில் இன்று எழுந்துள்ள நிலைமை நீண்டகால மாக இந்தியாவில் மேலோங்கியிருந்த தேசிய ஒருமைப்பாடிற்கும், ஜனநாயகத்திற்கும் சீர்செய்ய முடியாத பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது இது குறித்து மத்திய அரசு கவனம் செலுத்தவேண்டும். கர்நாடகத்தில் ஏற்பட்டுள்ள குழப்பங்களால் அங்கு வாழ்கின்ற, வேலைசெய்கின்ற தமிழர்களின் உயிர், உடமை பாதிக்கப்பட்டுள்ளது.

காவேரி நீர்ப்பிரச்சினை என்ற போர்வையில் கீழ் கொந்தளிப்புக் வன்செயலும் தேவையற்றவிதத்தில் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார். (கி)

யாழ். மாவட்டத்தில்

வான் கடிதம், முத்திரைக்கு பெரும் தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் விலையுயர்ந்த முத்திரைகள், ஒரு ரூபா, இரண்டு ரூபா முத்திரைகள் உட்பட வான் கடிதங்கள் ஆகியனவற்றுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல தபாலத்தோர்கள், உப அஞ்சல் நிலையங்களிலும் முத்திரைகள், வான் கடிதங்கள் கடந்த ஒரு மாதத்துக்கேல் இல்லாதவிதமாக பொதுமக்கள் கடிதங்கள் அனுப்புவதில் பெரும் சிரமத்துக்குள்ளாக வேண்டியுள்ளது.

வடமாகாணத்தில் பெரும்பாலான தபால் அலுவலகங்களில் முத்திரைகள் இல்லையென்றும் விண்ணப்பப் பலகை தொங்க விடப்பட்டுள்ளன. (154)

இந்திய - சீன கூட்டு செயற்குழு அமைக்க இணக்கம்

(புதுடில்லி)

இந்தியாவும் சீனாவும் எல்லை தகராறை தீர்த்துவைக்கு முகமாக கூட்டுசெயற்குழு ஒன்றை நிறுவ இணங்கியுள்ளன.

சீனப் பிரதமர் லீபெங் இந்தியாவில் மேற்கொண்ட 6 நாள் விஜயத்தின்பின் விடுக்கப்பட்ட கூட்டு அறிக்கையில் இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை திபெத்தையாகிய புடன் கடிய ஒரு சீனப்பகுதி என்பதை இந்திய இணங்கியுள்ளது.

அத்துடன் இந்தியாவில் தங்கியுள்ள திபெத்தியர்கள் சீனாவுக்கு எதிரான அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட இந்தியா அனுமதிக்காது என்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

தனியார் வீடுகளிலுள்ள

அரச தினைக்களங்கள் அடுத்த மாதம் இடம்மாறும்

(கொழும்பு)

அடுத்த மாதம் முதல் தனியார் வீடுகளில் இயங்கிவரும் அரச சார்புநிறுவனங்கள் உடனடியாக அந்தந்தப்பகுதிகளில் உள்ள செயலகங்களுக்கு மாற்றப்படவுள்ளது.

அடுத்த ஜனவரி மாதம் முதல் மத்திய அரசுடன் தொடர்புடைய இலாகாக்கள் மட்டுமே செயலகங்களில் இயங்கவுள்ளன. செயலகங்களில் தற்போது இயங்கிவரும் மற்றைய நிறுவனங்கள் இனிமேல் அந்தந்தப் பகுதிகளில் உள்ள உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களில் இயங்கும் என்றும் கூறப்படுகின்றது. (கி)

● "புலிகளின் வழிநடத்தலில்

76லட்சம் ரூபா பெறுமதியில் 31 குளங்கள், 32 வாய்க்கால், 2 வடிகால் புனரமைப்பு"

- மூர்த்தி

(பருத்தித்துறை)

"தமிழீழ விடுதலைப் புலிகளின் வழிநடத்தலில் தமிழீழ ஆய்வு நிறுவனம் தேச அபிவிருத்திக்கு திட்டம் ஆகியனவற்றின் அனுசரணையுடன் தமிழீழ மக்கள் மிகக் குறுகிய காலத்தில் சுமார் 76 இலட்சம் ரூபா பெறுமதியில் 31 குளங்கள், 32 வாய்க்கால்கள், 2 வடிகால்கள், அணைக்கட்டுகள் புனரமைக்கப்பட்டுள்ளன. இதுவரைக்கு அபிவிருத்திக் கடந்த 40 வருடங்களாக ஸ்ரீலங்கா அரசினால் தமிழீழப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டவிடத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் வழிநடத்தலில் தமிழீழ மக்கள் பெற்ற தேவைகள் வழங்கத் தகுதியாக இருப்பது தமிழீழ அபிவிருத்திக் கு பெற்றிக்கு நிச்சயம் வழிவகுக்கும்."

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட "நன்னீர் கற்றாடல் பாதுகாப்பு" கருத்தரங்கில் உரையாற்றிய தமிழீழ அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணக் கழக விவசாயத் துறை பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமை தாங்கினார்.

திரு. மூர்த்தி தொடர்ந்து கூறியதாவது: ஆயுதம் ஏந்திப் போராடுவது மட்டுமல்ல விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப்பாதை எனக் கருதக் கூடாது. தமிழீழத்தின் வளங்களைப் பாதுகாப்பதுடன், அவற்றிலான திட்டங்களை வகுப்பதுடன் அவற்றின் நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குவதும் விடுதலைப் போராட்டத்தின் முக்கிய பங்களிப்பாகுமென்பதை மறந்துவிடக் கூடாது துறைசார் வல்லுநர்கள் இவற்றிற்கான உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கிச் சாதனைகளை நிலைநாட்டி தமிழீழ அபிவிருத்திக்களுக்கு உதவவேண்டும்.

"யாழ். குடாநாட்டிலே நன்னீர் உவர் நீராக மாறி வருவது தமிழீழத்திற்கு ஏற்படுகின்ற சவாலாகவே இருக்கின்றது. எதிர்காலத்திலே தமிழீழத்திலே இந்நன்னீர் உவர் நீராக மாறும் பங்கர மோசமாகி வரும் நாட்களை ஏற்படுத்த இருப்பதனால் எமது எதிர்கால சந்ததியினர் வாழ்வதற்கு இன்றைக்கே அனுபவிக்க வேண்டிய அவல நிலை ஏற்படக் இடமுண்டு. நன்னீர் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், புதிய திட்டங்களை வழிவகுப்பதும் விடுதலைப் போராட்டத்திற் கு முக்கிய பணிகளாகும். மழை நீர் வீணே கடலுக்குப் பாய்ச்சப்படுவதுடன், உவர் நீர் நன்னீருக்குள் புகுவதும் தடை செய்யப்படவேண்டும்.

பேராசிரியர் கணேசலிங்கம் தலைமையுரையில், நன்னீர் பாதுகாப்பு இன்றுமிக முக்கியமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு துளி நீரையும் நாம் நன்கு பயன்படுத்த வேண்டுமென்றும் நன்னீர்ப் பாதுகாப்புக்கான பல்வேறு திட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் நன்னீர் பாதுகாப்புப் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி, பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் கூறினார்.

இக்கூட்டத்தில் பேராசிரியர் நவரத்தினராஜா, யாழ் மாநகர ஆணையாளர் திரு. எஸ். பாலசிங்கம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா, முன்னாள் யாழ் மாநகர ஆணையாளர் திரு சீ. வி. கே. சிவஞானம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டத் தலைவர் வைத்திய கலாநிதி நல்லிராஜ் கிளியர், நீர்வளச் சபையைச் சேர்ந்த திரு. கே. கோகுலராஜ, நவஉதயம் ஸ்ரீவித்தியராஜ, புவர்யாழ்வு புனரமைப்புப்பணிகளைச் சேர்ந்த திருவாளர்கள் செல்வி மயூரன் உட்பட இன்னும் பலர் கருத்துரைகளை வழங்கினர். தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் திரு. ரவிராஜ் நன்றி கூறினார். [52]

யாழ். நகரில் போலி நெய் விற்பனை கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் தற்போது போலி நெய் பெருமளவில் விற்பனைசெய்யப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நத்தார் பண்டிகை, புதுவருட தினங்களில் பொதுமக்கள் உணவு வகைகளில் நெய் கூடுதலாகப் பாவிப்பதால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில போலி அங்காடி வியாபாரிகள் ஒரு போத்தல் போலி நெய்யை 160 ரூபாவுக்கு விற்று வருகின்றார்கள்.

ஆடு, மாடு, கோழி போன்றவற்றின் கொழுப்புகளை உருக்கி இவற்றுக்கு மேல் சுத்தமான நெய்யை விடுவோர்களின் மிகக் கச்சிதமாக அடைத்து விற்பனை செய்துவருகின்றார்கள். இவற்றைப் பார்க்கும்போது சுத்தமான நெய்யாகவே காணப்படுகின்றது. (கி)

யாழ்.செயலகத்திலிருந்து பல ஊழியர்களை பிரதேச செயலகங்களுக்கு மாற்ற ஏற்பாடு

(மானிப்பாய்)

மாவாணசையமைச்சுக்கின் கீழ் யாழ் செயலகத்தில் பணிபுரியும் பல ஊழியர்கள் பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றுவது சம்பந்தமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் இனிமேல் பிரதேச செயலகங்களாக செயற்படவேண்டுமென்ற அரசின் புதிய நிர்வாக சேவைத் திட்டத்தை செயற்படுத்த முகமாக இந்த இடமாற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் செயற்படவிருக்கும் இப்பிரதேச செயலகங்களுடனாட்டிலுள்ள சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை குடாநாட்டில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையினால் சில உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் வேறு இடங்களிலுள்ள தனியார் வீடுகளில் இயங்குவதனாலும் இடவசதி இன்மையாலும் இவற்றை உடனடியாக செயற்பட வைப்பதில் சில நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக செயலகவட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன. [71]

வண்ணை சிவன்கோயிலில் 'திருவாசகப் பெருவிழா'

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன்கோவிலில் ஆலய பரிபாலனசபை நடாத்தும் "திருவாசகப் பெருவிழா" இன்றுமுதல் 20ம் திகதி வெள்ளிக்கிழமை வரை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

3 நாட்களும் காலையிலும், மாலையிலும் விஷேட சொற்பொழிவுகள், பட்டி மன்றம் கருத்தரங்கு, கலையரங்கு, வழக்காடு மன்றம் மற்றும் பல நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இன்று மாலை 5-30 மணிக்கு மணிவாசகரின் அரன் நிலைத்தரம் பெரிதும் வெளிப்பட்டு நிற்பது நீத்தல் விண்ணப்பத்திலா? குழைத்த பத்திலா? எனும் தலைப்பில் பட்டி மன்றம் நடைபெறும். அதற்கு நடுவராக திரு. இ. ஜெயராஜ் கடமையாற்றுவார். நீத்தல் விண்ணப்பத்திலே தான் என திரு. எம். எஸ். ஸ்ரீதரனும், திரு க. நாகேஸ்வரனும் ஆவேசமாகவும், குழைத்த பத்திலேதான் என திரு. தி. சிவகுமாரனும், பண்டிதர் மு. க. வேலாயுதபிள்ளையும் ஆவேசமாகவும் வாதிடுவர். (கி)

பிரேமா - தொண்டா சிறிமாவைப் பார்த்தனர்

[கொழும்பு]

கொழும்பு பெலியாஸ்த்தாவில் மகிச்சை பெற்று வரும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஜனாதிபதி டி.பி. பிரேமதாஸாவும் அமைச்சர் தொண்டமானும் சென்று பார்வையிட்டனர்.

நரம்பு தளர்ச்சி காரணமாக அனுமதிக்கப்பட்ட திருமதி சிறிமா இன்னும் சில தினங்கள் ஆஸ்பத்திரியில் இருப்பார் எனவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

திருமதி சிறிமாவின் நிலை பற்றி பூரண குணம் மேற்கொள்ளப்படுவதாக அவர் தொடர்ந்தும் ஆஸ்பத்திரியில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. [சி]

தன்னாட்சிக்கான அமைப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

★ காணி:

மாகாணத்திலுள்ள அரச காணிகள் மாகாணத்துக்கே சொந்தம். காணி பிரவேசம், நிர்வகித்தல், காணிப் பங்கீடு.

★ சட்டம் ஒழுங்கு

மாகாண அரசு 10,000 பேர்கொண்ட மாகாண பொலிஸ்படை ஒன்றை அமைத்தலும் நிர்வகித்தலும். இந்த பொலிஸ் படையின் தரம் ஐ.ஜி.பி., டி.ஐ.ஜி., ஜி.எஸ்., எஸ்.பி.பி., எஸ்.பி.பி., ஏ.எஸ்.பி.பி. மற்றும் பல தரங்களைக் கொண்டிருக்கும். பொலிஸ் படை மாகாண இனவிகிதாசாரத்திற்கேற்ப தெரிவு செய்யப்படும்.

மேலும் மாகாண பொலிஸ் படை, தேசிய பொலிஸ் படை என இரு படைப்பிரிவு இருக்கும்: மாகாண பொலிஸ் படை - மாகாண இன விகிதாசாரப்படியும், தேசிய பொலிஸ் படை - தேசிய இன விகிதாசாரப்படியும் அமையும்.

ஆயுதப்படையும் இதே போல் அமையும். மேலும் பொதுமக்களை பொலிஸ்படையிலும், ஆயுதப்படையிலும் சேர்த்துக்கொள்வது பற்றியும் கருத்திலெடுக்கப்படும்.

★ நிர்வாகம், பொருளாதாரம்

மாகாண நிர்வாகமிடம் கமிஷனை அமைக்கும் அதிகாரமும், நிர்வாகங்களை உருவாக்கும் அதிகாரமும் மாகாணசபையின் கீழ் இருக்கும்.

★ நிதி ஒதுக்கீடு

வெளிநாட்டு உதவிகளை நேரடியாக பெற நேரடியான பேச்சுவார்த்தை நடாத்தும் அதிகாரம் மாகாண அரசுக்கு உண்டு.

மேலும் மாகாண பொதுச் சேவைகள், நிலஅளவை, வனத்துறை, நீர்ப்பாசனம், விவசாயம், வாகன வரி, வேளாண்மை, மீன்பிடி, கூட்டுறவு, கல்வி-கலாச்சாரம், உயர்கல்வி, சுகாதாரம், ஆயுர்வேத சிகிச்சை, வைத்தியம் ஏனையவை, நிர்வாண -டினர் வைப்பு, உள்ளூராட்சி, சுற்றுச்சூழல்-மனிப்பொருள் சக்தி, தொழிற்துறைகள், தொடர்பு சாதனங்கள் (வி.வி-ரேடியோ) விநியோகப்பு நாளிதழ்கள், பொருளாதார, தொழில் நிபுணத்துவம், தகவல் வெளியீடுகள், (செய்திப் பத்திரிகைகள் - புத்தகங்கள்) விலக்கீடுபாடு, அனைவையும் நிறுவையும், ஆறுகளும் நீர்வழிப் பாதைகளும், துறைமுகங்கள் சேவை, எல்லை தாண்டிய மீன்பிடி, வைடுகள் பிரிவு, தொழிலாளர் நலன் பிரிவு] சமூகப் பாதுகாப்பும் சமூக காப்புறுதியும்.

சிறுபான்மையினர் பிரச்னை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மையினர் பற்றி குறிப்பிடுகையில்: சிறுபான்மை மக்களின் நலன்களுக்கு உத்தரவாதங்கள் வேண்டும். அரசியல் யாப்பில் இந்த உத்தரவாதம் இருக்கும்.

வடக்கு-கிழக்குப் பகுதியில் வாழும் முஸ்லிம்களுக்குச் சட்ட ரீதியாகப் பின்வரும் விடயங்களில் கவனம் எடுக்கப்படும்.

1. காணி.
2. சட்டம், ஒழுங்கு.
3. நிதி, நிதிநிறுவனங்கள்.
4. கல்வி, கலாசாரம்
5. விவசாயம்.
6. மீன்பிடி.
7. வர்த்தகம்.
8. வர்த்தகம்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஒரே மாகாணமாக இணைக்கும் கோரிக்கை பெரும்பான்மையாக முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் அவர்களின் அபிலாஷைகளை கருத்தில்கொண்டும், சமூக நலன் வேணுமானாலும் அவர்களுக்கென நிறுவனங்களை அமைக்கலாம். முஸ்லிம்களாக கிழக்கு மாகாணத்தில் ஒரு குழுவாக வாழும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களைச் சேர்ந்து ஐந்ஸ்ன பிரதேச சபை ஒன்றை அமைக்கலாம்.

மாகாண சபைக்கு வழங்கப்படும் பங்கீடுகளில் வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்கும் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்படும்.

1. வடக்கு-கிழக்கில் சிங்களவர் எப்பகுதியிலும் காணி வாங்கிக் குடியிருக்கலாம்.
2. மாகாண விகிதாசார முறையில் அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்படும்;
3. பொலிசுக்கு ஆட்சேர்ப்பு மாகாணத்தில் வாழும் சிங்கள மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப இடம்பெறும்.
4. மாகாண பொலிஸ் மா அதிபருக்கு கீழ் ஒரு சிங்கள உதவிப்பொலிஸ் மா அதிபர் நியமனம் புரிவர்.
5. மத்திய அரச மாகாண அரசுக்கு ஒதுக்கும் நிதி சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பகுதிக்கு பகிர்ந்து அளிக்கப்படும்.

இந்த யோசனையின் முழு விபரமும் தொடர்ச்சியாக 'ஈழநாட்டில்' வெளிவரும். (சி)

அதிபர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளம், அரசாங்கப்பணியாளர் பற்றிய பணவரவு பெற்றுக் கொள்வது தொடர்பாக இலங்கை வங்கி பிரதான முகாமையாளரை உடனடியாகத் திரும்பும்படி கேட்கப்பட்டுள்ளார்கள். (வி)

பிரச்னை தீர்வதை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கின்றன என அமைச்சர் தொண்டமான் பத்திரிகையாளர்கள் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அந்தக் கட்சிகள் பற்றி தான் உயர்ச்சியாகப்பட்ட நிலையிலுள்ளன. இனப்பிரச்னை தீர்வுக்கான நேரம் வந்து விடவில்லை இதனால் அவர்கள் எதிர்க்கிறார்கள் என்றார். (சி)

இவ்பத்திரிகை "சுதந்திரன்" லிமிடெட் சுதந்திரன் அச்சகம் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் வெளியிடப்பட்டு 18-12-1991 இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-12-18 திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number D/18556/91.

காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் காக்கேசன் துறை வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வொறி-னாக்கில் விபத்தில் சிக்கி, பலத்த காயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று காலையில் மரணமானார்.

செல்வி ஜெயந்தி துரைராஜ (கிளிநொச்சி நாச்சிமார்கோயிலடி) என்பவரே இவ்விபத்தில் காயமடைந்து மரணமானவர் ஆவார். [56]

கண்டனப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பண்டிவிரிச்சான் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற குண்டு வீச்சை எதிர்த்துக் கண்டனப் பொதுக் கூட்டம், இன்று காலை கைலாசபதி கலாமன்றம். யாழ். மக்கள்ஒழுக்காண்டர் குலையால் நடத்தப்படவுள்ளது. இக்கூட்டத்திற்கு அனைத்துப் பீட மாணவர்களையும்சமூகஅமைப்புகளுக்குமாறு மாணவர் அவை கேட்டுக்கொண்டுள்ளது.

தொண்டா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணத்தின் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக இ.தொ.கா. தலைமையில் நியமிக்கப்பட்டதையே அமைச்சர் தொண்டமான், எங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தாலோ அல்லது எதிர்க்கட்சிகளிலுள்ளோ அல்லது சிங்கள கட்சிகளாலோ ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இனப் பிரச்சனையை தீர்க்க தற்கால அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு இ.தொ.கா.வினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தின் ஒரு பிரதியையே, அமைச்சர் தொண்டமான் எங்களுக்கு அனுப்பியுள்ளார்.

வடக்கு - கிழக்குமக்களுக்கு தம்மைத்தாமே ஆளும் கொள்கை உரிமை வழங்கப்பட வேண்டும். என்று அமைச்சர் தொண்டமானால் தயாரிக்கப்பட்ட இத்திட்டத்தில் மலைவிடயங்கள் குறித்து தெளிவு ஏதுமில்லை: மாகாணசபையின் கையிருப்பு உரிமைகள் பற்றி அரசியல் சாசனத்தில் உள்ள 13-வது சரத்தில் இருக்கும் விபரங்களுடன் அமைச்சர் தொண்டமானின் திட்டத்தில் இல்லை.

மேலும் சமிடசபை பற்றியோ, சமிடசபையின் அதிகார வரம்பு பற்றியோ அல்லது சட்டசபைக்கும் - நாடாளுமன்றத்திற்கு மிடையிலான தொடர்பு பற்றியோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. முதலமைச்சர், மத்திமர்களின் நிறைவேற்று அதிகாரம் பற்றியும் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

பிரதேச சபைகளுக்கு எந்தவித அதிகார வரம்பு உள்ளது என்று பற்றியும் குறிப்பிடப்படவில்லை.

அமைச்சர் தொண்டமானின் இத்திட்டம் பற்றி விடுதலைப் புலிகளின் உயர்பீடத்தோடு பரிசீலித்து வருகின்றது: இத்திட்டத்தை அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் நாம் நாம் இதுபற்றி கருத்து கூறமுடியும்.

தொண்டமானின் தீர்வு யோசனையை அரசாங்கமோ, கட்சிகளோ ஏற்றாலும் அமைச்சர் தொண்டமான் இன்று வந்து எம்முடன் பேசலாம்.

திரு. தொண்டமான் இங்கு வந்து மக்களிடம் தன் தயாரிப்பையே நேரில் பார்வையிடலாம்.

இது அவருக்கு வடக்கு கிழக்கு மாகாண பார்வையிட ஒரு சந்தர்ப்பமாக அமையும் என்றும் கூறினார். [சி-வி]

ரோந்துப் படையினர் மீது புலிகள் தாக்குதல்

[மன்னார்]

மன்னாரிலிருந்து நானாட்டான் நோக்கி ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத்தாக்குதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது

கற்குடா சுற்றிவளைப்பில் ஏழு தமிழர் கைது

[கற்குடா]

கற்குடாவில் ஏழு தமிழர்கள் அரசபடைகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனைமையில் கற்குடாவில் இடம்பெற்ற சுற்றிவளைப்பு ஒன்றிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய கமுப்புத் தொழிலாளர் சங்க உறுப்பினர்கள், இணைச்செயலாளர் உறுப்பினர்கள் சந்திப்பு இன்று காலை பத்துமணிக்கு தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

காக்கேசன்துறை உணவுக் களஞ்சிய வேலைநிறுத்தம் தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்படும்.

சாவ் விளையாட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு காரணங்களுக்காக திரு. நரசிம்மராவ் 21ம் திகதி காலையே நாடு திரும்பி விட்டார்களெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

படகுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் இப்படகுகளில் சென்றதாகவும், படகு பிடிக்கப்பட்டு இவர்கள் கைது செய்யப்பட்ட இவர்கள் பற்றிய தகவல் எதுவும் அறிய முடியாது இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை நேற்று காலை திருப் கடற்பகுதியில் காலை 6 மணியளவில் மற்றொரு மீனவரின் படகு மீது பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது (56)

3 ஜெனரேட்டரும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலுடன் எழுதுபடைத்ததினால் அதிக மின்சாரம் மூன்றாகத் தடைப்பட்டுள்ளது.

முதலில் எழுதுபடைத்த 55 கே.வி. ஜெனரேட்டர் திருத்தம் செய்வதற்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன்பின்பு எழுதுபடைத்த 27 கே.வி. ஜெனரேட்டர், யாழ். நகரில் எழுதுபார்க்கப்பட்டு வரும் இவ்வேளையில் மூன்றாவதாக இருந்த 37 கே.வி. ஜெனரேட்டர் நேற்று திடீரெனஎழுதுபடைத்துவிட்டதாக யாழ். மேதகு வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது எஞ்சியுள்ள "10 கே.வி.ஏ." ஜெனரேட்டர் மூலமே ஒருவழிப் பாதை மின்சாரம் சுழற்சி முறையில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், கூறப்படுகின்றது: (வி)

போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் பிரிவோடப்பட்ட தமிழர்கள் சேவைகளுக்கும் இடமாற்ற தொழில் நுட்ப சேவைகளுக்குமான ஆட்சேர்ப்பு போட்டிப்பரீட்சை இம்மாதம் 23, 24ந் திகதிகளில் வடக்கு கிழக்கு பகுதிகளில் மட்டும் நடைபெறுகின்றது தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன் மாதம் இப்பரீட்சை மத்திய பிரதேசங்களில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. [மா]

அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

1992 ம் ஆண்டிற்கான ஆயிரத்தித் திட்டங்களை அரசாயுமுகமாக சகல கோட்டத்திலுள்ள கொத்தணி அதிபர்களையும் பாடசாலை அதிபர்களையும்பிரதேசவாரி திகதிவாரி பகுதியில் கோட்டாதிபதியாக திவருது கலந்து கொள்ளும் வண்ணம் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

மாவிட்டபுரம் கல்விக் கோட்டம் நாளை 19-ம் திகதி மு.ப. 9 மணிக்கு யா/நல்லூர் சாதனாபாடசாலை மண்டபத்திலும், மருதனார்மடம் கல்விக் கோட்டம் நாளை பி.ப. 2 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும், மண்டைதீவு கல்விக்கோட்டம் இம்மாதம் 20ம் திகதி பி.ப. 2 மணிக்கு யா/மண்டைதீவு மகளிர் கல்லூரி மண்டபத்திலும், தென்மராட்சிக் கல்விக்கோட்டம் 21ம் திகதி மு.ப. 9 மணிக்கு யா/நெல்லியடி மண்டபத்திலும், வடமராட்சி கல்விக்கோட்டம் பி.ப 2 மணிக்கு யா/வடஇந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறும்.

முருகன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான விபரங்கள் தொடர்பான கருத்தரங்கு உள்நாட்டு, வெளிநாட்டு இந்து நிறுவனங்களுக்கு மன்னார் வாழ் இந்து மக்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. [128]

மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் இராசம்மா

காரைநகர் மருதடியை சேர்ந்த இராசம்மா 6-12-91 அன்று அக்கரையன்குளம் கிளிநொச்சியில் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மனைவியும் மணிமேகலையின் தாயாரும், குணரத்தினத்தின் மாமியாரும், சுபத்திரா நடராசா, சித்திரா சர்வானந்தன், செந்தில்நாதன் ஆகியோரின் சகோதரியும் பிரசாந்தி, பாரதிகன் ஆகியோரின் பேத்தியும் ஆவார். இவ்மறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளுங்கடி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
A. குணரத்தினம்,
(மருமகன்)
அக்கரையன்குளம்,
கிளிநொச்சி.

(கி-5729)